## 30. நீர் ஒருவரே ஆண்டவர்

**பல்லவி**

நீர் ஒருவரே ஆண்டவர்
நீர் ஒருவரே இரட்சகர்
வழியும் சத்தியமும் ஜீவனுமானவர்

**அனுபல்லவி**

*உமக்கே ஸ்தோத்திரம் - 4*

**சரணங்கள்**

1. சிலுவையிலே நீர் வெற்றி சிறந்தீர்
சாத்தான் தலை நசுக்கி ஜெயம் எடுத்தீர
மரணத்தையே விழுங்கி விட்டீர்
பாதாளத்தை நீர் தோற்க்கடித்தீர்
- உமக்கே

2. உம்மாலன்றி பாவ மன்னிப்பு இல்லையே
உம்மாலன்றி பரலோகமில்லையே
உம் இரத்தத்தால் நான் கழுவப்பட்டேன்
உம் இரத்தத்தால் நான் நீதிமானேன்
- உமக்கே

3. உம்மாலே கூடாதது ஒன்றுமில்லையே
உம்மாலே முடியாது ஏதுமில்லையே
இல்லாதவற்றை இருப்பது போல
அழைக்கும் தேவன் நீர் தானே
- உமக்கே